ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

# நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர்- 339) Mar (1) / 2021



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

## உட்பொதிவு


1. லக்ஷ்மீ தந்த்ரம் ....................................................................................................3

2. ஸங்கல்ப ஸூர்யோதயம் ……………………………………………………….…….5

3. தத்வ த்ரயம்…………………………………………………………………………….6

4. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)....……...…………………………………….11

5. ஸ்தோத்ர ரத்னம் (பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)…………………….19

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

# லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 159)

16. இதி அக்ஷ குஹரே ஜ்ஞேயம் க்ரமாத் பீஜ சதுஷ்டயம்
நாபி ஔராதௌ து ஸூர்யாதீநிதி பூர்வோக்தயா திசா

**பொருள்** – இந்தச் சக்கரத்தின் அச்சில் எவ்விதம் நான்கு பீஜங்களும் சரியான வரிசையில் அமைந்துள்ளன என ஒருவன் அறியவேண்டும். வெளிவட்டமும் ஆரங்களும், முன்பு கூறப்பட்டது போன்று, ஸூர்யன் முதலானவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

17. ஹ்ர ஸ்ர ஆகார ஸ்வரூபோ ய: ஸ ஸஹஸ்ரவிதாந்வயீ
ஸூர்ய காலாநல த்வந்தைர் அப்ரமேயாதி பேதிதை:
18. அம்ருதாநல யுக்மைச்ச தாவத்பிஸ் தாத்ருசைரபி
ஸம்ஹத்ய பேதயேத் காதீநக்நீஷோமமயை: ஸ்வரை:
19. ஸூர்ய ஸோம அநிலாந் ஹித்வா த்ரிம்சதம் சைகமேவ ச
அஷ்டந்யூந ஸஹஸ்ரம் தத் அக்ஷராணி ஸ்யுரஜ்ஞநம்
20. பீஜாஷ்டகம் து தாராதி ஹ்ரஸ்யுக்தம் பவேதத
ஈசாத்யநுப்ரதேசஸ்தம் வஹ்நேர்வாயு பதாவதி

**பொருள்** – ஹ்ர மற்றும் ஸ்ர என்பதாக அமைந்துள்ள இந்த மந்த்ரமானது, ஆயிரம் ஸ்வரூபங்களைக் கொண்டதாகும். இவை, அப்ரமேயம் (அதாவது "அ") முதலான பதினாறு எழுத்துக்களை ஒவ்வொன்றாக ஸூர்யன் (ஹ), காலாநலன் (ர), அம்ருதம் (ஸ) மற்றும் அநலன் (ர) ஆகியவற்றுடன் இணைத்து உண்டாக்கப்படுகிறது. அக்னி மற்றும் ஸோமன் ஆகியவற்றால் நிரப்பப்பட்ட

இந்த ஒவ்வொரு அக்ஷரத்துடனும், ஸூர்யன் (ஹ), ஸோமன் (ஸ) மற்றும் அக்னி (ய) ஆகியவை நீங்கலாக உள்ள 31 எழுத்துக்கள் சேர்க்கப்படுகின்றன. இவை ஆயிரத்திற்கு எட்டு எண்ணிக்கை குறைவாக அமைகின்றன (அதாவது "ஹ" தொடங்கி "ம" முடிய 25; இவற்றுடன் ய, ல, வ, ச, ஷ, க்ஷ ஆகியவை சேர்ந்தால் 31; இவை ஒவ்வொன்றும் ஸூர்யன் மற்றும் ஸோமன் என இருவகை; ஆகவே, 31 X 16 X 2 = 992). இவற்றுடன் ஹ்ர மற்றும் ஸ்ர ஆகியவை உள்ளடங்கிய எட்டு பீஜங்கள் சேர்க்கப்பட்டு (ஏழு பீஜங்கள் இருபத்து ஆறாவது அத்யாயத்தில் உள்ளன; ஸுதர்சன பீஜம் சேர்த்து எட்டு பீஜங்கள்) ஆயிரம் ஆகின்றன. இதன் பின்னர் இந்த ஆயிரம் எழுத்துக்களும் ஒரு வட்ட வடிவில், வடகிழக்கு தொடங்கி, தென்கிழக்கு வழியாக, வடமேற்கு முடிய அமைக்கப்படுகின்றன.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்

ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீரங்கநாயகி ஸமேத ஶ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஶ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸங்கல்ப ஸூர்யோதயம்

(பகுதி – 26)

[ரதி கூறுவது] எஜமானரே! மனதை உறுதியாகப் பற்றுகின்ற வலிமையான மயக்கங்கள் எதுவாக இருந்தாலும் அதனைப் போக்கவல்லவர்களாக யோகிகள் உள்ளனர். அவர்களை அணுகாமல் தாங்கள் இருத்தல்வேண்டும்.

[காமன் சிரித்தபடி உரைத்தல்] அன்பானவளே! உனது கண்களில் உள்ள தடுமாற்றத்தை, உனது மனதிலும் நான் காண்கிறேன். யோகிகளில் முதன்மையானவர்களைக் கூட, இளம்பெண்கள் என்னும் யோகிகளுடைய கால்களில் விழும்படி நான் செய்யவில்லையா?

41. ஸுபகபருஷைர்மதஸ்த்ரை: கீலிதம் அந்யோந்யகவசிதைர்காதம்
கிம் ந விதிதம் பவத்யா கிம் அபி பித: ஸ்யூதஜீவிதம் மிதுநம்

**பொருள் –** (காமன் கூறுவது) அழகானதும், கொடியதாக உள்ளதும் ஆகிய எனது அம்புகளால் ஒன்றாக இணைக்கப்பட்டு, ஒருவருடைய உடல் கொண்டு மற்றொருவருடைய உடல் மூடப்பட்டபடி, ஒன்றுடன் ஒன்று பின்னிய நிலையில் உள்ள ஒரு ஜோடியை (இது அர்த்தநாரீச்வரரைக் குறிக்கும்) நீ அறியவில்லை போலும்.

தூப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச் செய்த

# தத்வ த்ரயம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 36)

87. இதுதான் “பொங்கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரியமைம்பூதமிங்கிவ் வுயிரேய் பிரகிருதி மானாங்கார மனங்கள” என்கிறபடியே இருபத்து நாலு தத்வமாயிருக்கும்.

**அவதாரிகை** - ஏவம்பூதமான அசித்துதான் கார்யகாரணரூபேண அநேக தத்வமாயிருக்கும் படியை அருளிச்செய்கிறார் (இதுதான் பொங்கைம்புலன்) என்று தொடங்கி.

**விளக்கம் –** இவ்விதம் உள்ள அசித்தானது, கார்யம் மற்றும் காரண வடிவமாகப் பல தத்வங்களாக உள்ள விதங்களை அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம் –** (ஐம்புலன்) சப்தாதிகள்; பொங்குதலால், சேதநரை விக்ருதராம்படி பண்ணுகைக்கீடான இவற்றினுடைய உத்ரேகம் சொல்லுகிறது. இவ்விடத்தில் விசேஷ்ய மாத்ரமே அபேக்ஷிதம். (பொறியைந்தாவன) ச்ரோத்ராதிகள். (கருமேந்திரியம்) வாகாதிகள். (ஐம்பூதம்) ககநாதிகள். (இங்கிவ்வுயிரேய் பிரகிருதி) என்றது, ஸம்ஸார தசையில் இவ்வாத்மாவோடே அத்யந்த ஸம்ஸ்ருஷ்டையாய்க் கிடக்கிற ப்ரக்ருதி யென்றபடி. இங்கும் விசேஷ்ய மாத்ரமிறே தத்வ ஸங்க்யைக்கு வேண்டுவது. (மானாங்கார மனங்களாவன) மஹானும் அஹங்காரமும் மநஸ்ஸும். இப்படி இருபத்து நாலு தத்வத்தையும் அருளிச் செய்கிற ஆழ்வார், தந்மாத்ரங்களை அருளிச்செய்யாதே, சப்தாதிகளை அருளிச் செய்தது, தந்மாத்ரங்களுக்கு பூதங்களோடு ஸ்வரூப பேதமின்றியிலே, அவஸ்தா பேத மாத்ரமாகையாலே

தந்மாத்ரங்களான பூதங்கள் பத்தையும் அஞ்சு தத்வமாக்கி, சப்தாதிகளைந்தையும் ஐந்து தத்வங்களாகக் கொண்டு இவையும், ஏகாதசேந்த்ரியங்களும் ப்ரக்ருதி மஹதஹங்காரங்களுமாக சதுர்விம்சதி தத்வமென்று கொள்ளுவதும் ஒரு பக்ஷமுண்டாகையாலே, உபய பக்ஷத்திலும் தத்வ ஸங்க்யையில் ந்யூநாதிரேகமில்லையிறே. ஆகையால், இப்பாட்டிற் சொன்னபடியே இருபத்துநாலு தத்வமாயிருக்குமென்றதாயிற்று.

**விளக்கம்** – இங்கு திருவாய்மொழி (10-7-10) – பொங்கு ஐம்புலனும் பொறி ஐந்தும் கருமேந்திரியம் ஐம்பூதம் இங்கு இவ் உயிரேய் பிரகிருதி மானாங்கார மனங்களே – என்ற பாசுரத்தைக் கூறுகிறார். ஐம்புலன் என்பது ஓசை முதலானவை. இவற்றுக்கு “பொங்கு” என்ற அடைமொழி கொடுத்ததன் மூலம், இவை மனிதர்களை மாற்றம் அடையும்படிச் செய்வதற்கு இணையாக உள்ள எழுச்சியைக் கூறுகிறார். இங்கு புலன்களுடைய நிலையை மட்டுமே கொள்ளவேண்டும். “ஐந்து பொறிகள்” என்பது செவி போன்றவை ஆகும். கர்ம இந்த்ரியங்களானவை, வாக்கு போன்றவை; ஐந்து பூதங்களானவை ஆகாசம் போன்றவை ஆகும். (இங்கு இவ் உயிரேய் பிரகிருதி) – ஸம்ஸார நிலையில் இந்த ஆத்மாவுடன் கலந்து கிடக்கும் ப்ரக்ருதி. இந்த இடத்திலும் முதன்மையான இந்த்ரியங்களை மட்டுமே தத்வ கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும். (மானாங்கார மனங்கள்) - மஹாந், அஹங்காரம் மற்றும் மனம். இவ்விதம் இருபத்து நான்கு தத்துவங்களையும் அருளிச்செய்த ஆழ்வார் தந்மாத்ரைகளை அருளிச்செய்யாமல், ஓசை முதலானவற்றை மட்டும் ஏன் அருளிச்செய்தார்? இதற்கு விடை அளிக்கிறார். தந்மாத்திரைகளுக்கு அவற்றின் பூதங்களுடன் ஸ்வரூப வேறுபாடு இல்லை; ஆகவே நிலைமை மாறுபாடு அடைதல் மட்டுமே நிகழ்கின்றன. எனவே தந்மாத்ரைகளாகிய பூதங்கள் பத்தையும் ஐந்து தத்வங்கள் என்று கொண்டார்; ஓசை முதலான ஐந்தையும் ஐந்து தத்துவங்களாகக் கொண்டார்; ஆகவே இந்தப் பத்தும், பதினொரு இந்த்ரியங்களும், ப்ரக்ருதி, மஹத், அஹங்காரம் என்பதாக இருபத்து நான்கு தத்துவங்கள் என்று ஒரு சிலர் கொள்வதால், இரண்டு விதமாகக் கொள்வதில் எந்தவிதமான எண்ணிக்கை மாற்றமும் இல்லை. எனவே இந்தப் பாசுரத்தில் கூறியபடி இருபத்து நான்கு தத்வங்கள் உள்ளன என்றாகிறது.

88. இதில் ப்ரதம தத்வம் ப்ரக்ருதி.

**அவதாரிகை** - இப்பாட்டில் தத்வங்களைச் சொன்னவித்தனையொழிய, இவற்றினுடைய க்ரம கதநம் பண்ணிற்றில்லையிறே. ஆகையால் இதில் ப்ரதம தத்வமேது? என்னு மாகாங்க்ஷையிலே அருளிச் செய்கிறார்.

**விளக்கம்** – இந்தப் பாசுரத்தில் தத்வங்களை எண்ணிக்கையை அருளிச்செய்தார்; ஆனால் இவற்றின் வரிசையைக் கூறவில்லை அல்லவோ? ஆகவே அவற்றில் முதன்மையான தத்வம் எது என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (இதில் ப்ரதம தத்வம் ப்ரக்ருதி) என்று. ப்ரக்ருதியென்றும், ப்ரதாந மென்றும், அவ்யக்தமென்றும் ப்ரதம தத்வத்துக்குப் பர். ப்ரக்ருதி என்று சொல்லுகைக்கடி முன்னே சொல்லப்பட்டது. ப்ரதாநமென்கிறது, எம்பெருமானுடைய லீலைக்கு ப்ரதாநமான உபகரணமாகையாலே. அவ்யக்தமென்கிறது, அநபிவ்யக்த குண விபாகமாகையாலே.

**விளக்கம்** – முதல் தத்வமானது ப்ரக்ருதி, ப்ரதானம், அவ்யக்தம் எனப் பலவிதமாக வழங்கப்படுகிறது. ப்ரக்ருதி என்று கூறுவதற்கான பெயர்க்காரணம் முன்பே கூறப்பட்டது. ப்ரதானம் என்பது, எம்பெருமானுடைய லீலைகளுக்கு முதன்மையான கருவியாக உள்ளது என்ற பொருள் தருகிறது. அவ்யக்தம் என்பது, இதற்குள் இருக்கின்ற மூன்று குணங்களும் கண்களுக்குப் புலப்படுவதில்லை என்பதை உணர்த்துகிறது.

89. இது அவிபக்த தமஸ்ஸென்றும், விபக்த தமஸ்ஸென்றும், அக்ஷரமென்றும் சில அவஸ்த்தைகளை யுடைத்தாயிருக்கும்.

**அவதாரிகை** - இப்படி ப்ரதம தத்வமான ப்ரகருதிக்குண்டான அவஸ்தா விசேஷங்களை அருளிச்செய்கிறார் (இது அவிபக்த தமஸ்ஸு) என்று தொடங்கி.

**விளக்கம்** – இவ்விதம் முதன்மையாக உள்ளதான ப்ரக்ருதிக்கு இருக்கின்ற பல்வேறு பரிணாம நிலைகளுடைய சிறப்புகளை அடுத்து அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "அவ்யக்தமக்ஷரே லீயதே, அக்ஷரம் தமஸி லீயதே, தம: பரே தேவ ஏகீ பவதி" என்கிறபடியே, ஸம்ஹ்ருதி ஸமயத்தில் அவ்யக்தாவஸ்தை குலைந்து அக்ஷராவஸ்தமாய். அது தானும் குலைந்து அதிஸூக்ஷ்மமாய தமச்சப்த வாச்யமாய அது தானும் நாம ரூப விபாக அநந்ஹமாம்படி ஸர்வேச்வரன் பக்கலிலே ஏகீபவித்து நிற்கையாலே அவிபக்த தமஸ்ஸென்றும்; ஸர்ககாலம் வந்தவாறே "ப்ராதுராஸீத் தமோநுத:" என்கிறபடியே, அவனாலே ப்ரேரிதமாய்க் கொண்டு நாம ரூப விபாக யோக்யமாம்படி அவன் பக்கல நின்றும விபக்தமாய், கார்யோந்முகமாகையாலே விபக்த தமஸ்ஸென்றும்; அநந்தரம் தத் ஸங்கல்ப விசேஷத்தாலே புருஷ ஸமஷ்டி கர்ப்பமான அசேதநமென்று விவேகிக்கைக்கும் அபதமாம்படியான தமோவஸ்தை குலைந்து புருஷ ஸமஷ்டி கர்ப்பத்வம் தோன்றும்படியான அவஸ்தையை ப்ராபித்து நிற்கையாலே அக்ஷரமென்றும், இங்ஙனே சில அவஸ்தைகளை உடைத்தாயிருக்குமென்கை. ஆகையால் இது அவிபக்த தமஸ்ஸாகையாவது, அவ்யக்த அக்ஷராவஸ்தைகள் குலைந்து, தமச்சப்த வாச்யமாய், நாம ரூப விபாக அநந்ஹமாம்படி ஸர்வேச்வரன் பக்கலிலே ஏகீபவித்து நிற்கை. விபக்த தமஸ்ஸாவது, நாம ரூப விபாக அர்ஹமாம்படி விபக்தமாய், கார்யோந்முகமாகை. அக்ஷரமாகையாவது, இது அசித்தென்றும், இதினுள்ளே புருஷ ஸமஷ்டி கிடக்கிறதென்றும் விவேகிக்கவொண்ணாதபடி அதிஸூக்ஷ்மமாயிருக்கிற தமோவஸ்தை குலைந்து, புருஷ ஸமஷ்டி கர்ப்பத்வம் தோன்றும்படியான அவஸ்தையை பஜிக்கை என்றதாயிற்று.

**விளக்கம்** – ஸுபால உபநிஷத் (2) - அவ்யக்தம் அக்ஷரே லீயதே | அக்ஷரம் தமஸி லீயதே | தம: பரே தேவ ஏகீபவதி – அவ்யக்தம் அக்ஷரத்திலும், அக்ஷரம் தமஸ்ஸிலும் லயிக்கின்றன. தமஸ் உயர்ந்த தேவனிடமும் சென்று ஒன்றாகிறது – என்பதற்கு ஏற்ப, ப்ரளய காலத்தில் அவ்யக்த நிலையானது குலைந்து, அக்ஷர நிலையை அடைகிறது; அதன் பின்னர் அக்ஷர நிலையும் குலைந்து, மிகவும் ஸூக்ஷ்மமான நிலையை அடைகிறது; அந்தக் கட்டத்தில் தமஸ் என்ற பெயர் பெறுகிறது; அத்தகைய தமஸ்ஸானது பெயர் மற்றும் ரூபம் என்று பிரித்து

அறிவதற்கான தகுதி அற்றதாக, ஸர்வேச்வரனிடம் சென்று ஒடுங்குகிறது; இதனால் அது "அவிபக்த தமஸ்" என்று கூறப்படுகிறது. அதன் பின்னர் ஸ்ருஷ்டி காலம் வந்தவுடன், மநு. (1-6) – ப்ராதுராஸீத் தமோநுத: - இருளை விரட்டும்விதமாக வெளிப்படுத்தினான் - என்பதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனால் தூண்டப்பட்டு பெயர் மற்றும் ரூபம் கொண்டு பிரித்து அறிவதற்கான தகுதி கொண்டதாக, ஸர்வேச்வரனிடமிருந்து தனியாக நின்று, கார்யங்கள் உற்பத்தி ஆவதற்கு ஏற்றபடி உள்ளதால், "விபக்த தமஸ்" என்று கூறப்படுகிறது. அதன் பின்னர் ஸர்வேச்வரனுடைய ஸங்கல்பத்திற்கு உள்ள சிறப்பு காரணமாக, ஆத்மாக்களும் ப்ரக்ருதியும் இணைந்து, கர்ப்பம் அடைந்த பயிர்கள் நிலையை அடைகிறது; அதனால் அக்ஷரம் எனப்படுகிறது. இப்படியாக சில நிலைகளுடன் கூடியதாக உள்ளது. எனவே ப்ரக்ருதியானது அவிபக்த தமஸ் என உள்ளது ஏனென்றால், அவ்யக்தம் மற்றும் அக்ஷரம் என்பதான நிலைகள் மாற்றம் அடைந்து "தமஸ்" என்று அழைக்கப்படுவதாக, பெயர் மற்றும் ரூபம் பிரித்து அறியலாம்படி தகுதி இன்றி, ஸர்வேச்வரனிடம் ஒடுங்கி நிற்பதால் ஆகும். இது விபக்த தமஸ் என உள்ளது ஏனென்றால், பெயர் மற்றும் ரூபம் என்று பிரித்து அறியத் தகுதி கொண்டதாக, கார்யங்கள் தோன்றுபடியாக இருப்பதால் ஆகும். ப்ரக்ருதியானது, அசித் என்றும், இதற்குள் அனைத்து ஜீவாத்மாக்களும் தொகுத்த நிலையில் உள்ளனர் என்றும் பிரித்து அறியாதபடி, மிகவும் ஸூக்ஷ்மமான தமஸ் நிலையானது மாறி, ஜீவாத்மாக்களுடைய தொகுப்பு நிலை கர்ப்பம் என்பது வெளிப்படும்படியான நிலையை அடைவதால் அக்ஷரம் எனப்படுகிறது.

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்

...தொடரும்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீரங்கநாயகி ஸமேத ஶ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 304)

4-7-8 கண்டு கொண்டு என் கைகள் ஆர நின் திருப்பாதங்கள் மேல்
எண்டிசையுமுள்ள பூக்கொண்டு ஏத்தி யுகந்துகந்து
தொண்டரோங்கள் பாடியாடச் சூழ் கடல் ஞாலத்துள்ளே
வண்டுழாயின்கண்ணி வேந்தே! வந்திடகில்லாயே

**பொருள் -** நறுமணம் பொருந்திய துளசிமாலையை அணிந்தவனே! உன்னை எனது கண்களால் பரிபூர்ணமாக அனுபவித்து, உனது திருவடிகளின் மீது எட்டுத்திசைகளிலும் உள்ள மலர்களைக் கொண்டு வந்து தூவியபடி மகிழ்ந்து பரிபூர்ண இன்பமாகும்படியாக எனது கைகள் இருந்து, இப்படியாக ஒவ்வொரு செயல் மூலமும் ப்ரீதி பரவசராக நிற்கும் உன்னுடைய தொண்டர்களாகிய நாங்கள் பாடி ஆடும்படியாக, கடலால் சூழப்பட்ட இந்த ஸம்ஸார உலகத்திற்குள் நீ வராமல் உள்ளாயே!

**அவதாரிகை -** பெற்ற அம்சம் சொன்னாராய், பெறாத அம்சம் இதுவென்கிறார் இதில்.

**விளக்கம் -** கடந்த பாசுரத்தில் தான் அடைந்தவற்றை அருளிச்செய்தார். இந்தப் பாசுரத்தில், தான் அடையாதவற்றை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (கண்டு கொண்டு) – "காண விரும்புமென் கண்கள்" என்று காணப் பெறாதே பட்டினி விட்ட கண் பட்டினி தீரும்படி கண்டு கொண்டு. "அரவிந்தம் போன்று நீண்ட கண்ணானைக் கண்ணாரக் கண்டுகொண்டு" என்கிறபடியே இக்கண்களின் வயிறாரக் கண்டு கொண்டு. (என் கைகளார) "தாயவனேயென்று தடவுமென் கைகள்" என்கிற கைகளின் உறாவுதல் தீரும்படியாக; கலியர் "வயிறாரவுண்ண" என்னுமாபோலே. (நின் திருப்பாதங்கள் மேல்) உனக்கு தாரகமுமாய் போக்யமுமான திருவடிகளிலே. "பிடித்துச் சுவைத்துண்ணும் பாதக்கமல"மிறே, தாரகம் தானேயாய் நின்றதிறே. அன்றிக்கே, எனக்கு ப்ராப்தமுமாய் போக்யமுமான உன் திருவடிகளிலே. "உன் தேனே மலரும் திருப்பாத"த்திலே. முன்பு அநுவர்த்தித்துப் போருமது உண்டிறே விஷயங்களிலே; அங்ஙனன்றிக்கே, ப்ராப்தனான உன் திருவடிகளிலே. "த்வத் பாத பங்கஜ பரிக்ரஹ தந்ய ஜந்மாபூயாஸம்" என்கிறதுக்கு ஆளவந்தார், "வார்த்தை அழகிது, வகுத்த விஷயத்திலேயாகப் பெற்றிறோம்" என்று அருளிச்செய்தார்.

**விளக்கம்** – திருவாய்மொழி (3-8-4) – காண விரும்பும் என் கண்கள் - என்பதற்கு ஏற்ப, இதுவரை காண இயலாமல் நின்ற ஆழ்வாருடைய திருக்கண்களின் பட்டினி தீரும்விதமாகக் கண்டு கொண்டு. பெரியதிருமொழி (2-5-8) - அரவிந்தம் போன்று நீண்ட கண்ணானைக் கண்ணாரக் கண்டுகொண்டு – என்பதற்கு ஏற்ப, கண்கள் தங்களுடைய வயிறு ஆரும்படியாகக் கண்டு கொண்டு. (என் கைகள் ஆர) – திருவாய்மொழி (3-8-3) – தாயவனே என்று தடவும் என் கைகள் - என்பதாக உள்ள கைகளுடைய தவிப்பு நீங்கும்படியாக; பசி எடுத்தவர்கள், "வயிறு ஆர உண்ண" என்று கூறுவது போன்று உரைக்கிறார். (நின் திருப்பாதங்கள் மேல்) - உனக்குத் தாரகமாகவும் இனிமையாகவும் உள்ள திருவடிகள். பெரியாழ்வார் திருமொழி (1-2-2) - பிடித்துச் சுவைத்துண்ணும் பாதக்கமலங்கள் – என்பதாக உள்ள திருவடிகள் அல்லவோ அனைத்திற்கும் தரிக்கும்படியாக உள்ளது? அல்லது வேறுவிதமாகவும் கூறலாம்; எனக்குக் கிட்டவல்ல பேறாகவும், இனிமையாகவும் உள்ள உனது திருவடிகளில். திருவாய்மொழி (1-5-5) - உன் தேனே மலரும் திருப்பாதம் – என்பதாக உள்ள திருவடிகளில். முன்பு மற்ற விஷயங்களில் ஈடுபட்ட நின்ற காலம் உண்டு; அவ்விதம் அல்லாமல், அடையத்தக்கவனாக உள்ள உனது திருவடிகளில். மாலதீ மாதவ நாடகத்தில் – த்வத் பாத பங்கஜ பரிக்ரஹ தந்ய ஜந்மாபூயாஸம் -

உனது தாமரை போன்ற திருவடிகளை அடைவதன் மூலம் எனது பிறவிப்பயனை நான் அடைந்தவன் ஆவேன் - என்றுள்ள வாக்கியத்தைக் கேட்ட ஸ்வாமி ஆளவந்தார், "நன்றாக அமைந்துள்ள சொற்கள்; இவற்றை நாம் நம்மால் அடையப்பட வேண்டிய விஷயத்தில் பெறவில்லையே" என்று அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** - (எண் திசையும் இத்யாதி) விஷயாநுரூபமாகவும், என்னுடைய அபிநிவேசாநுரூபமாகவும். தம்முடைய ஆசாநுரூபமாக "ஆசையிலுள்ளவையெல்லாம் வேணும்" என்கிறார். அவ்வாசைதான் திக்குப்பட்டிறேயிருப்பது. அங்ஙனேயிறே கைங்கர்ய ருசியுடையார் வார்த்தையிருப்பது; கலியர் "கல அரிசிச்சோறு உண்ண வேணும்" என்னுமாபோலே. "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" என்றிறே இருப்பது. (உகந்து உகந்து) ப்ரீதி மாறாதே செல்லும்படியாக. (தொண்டரோங்கள்) இக்கைங்கர்யத்திலே சுவடறிந்த நாங்கள், "கேசவன் தமர்"க்குப்பின்பு தனியரல்லரிறே. (பாடியாட) ப்ரீதி ப்ரேரிதராய்ப் பாடுவது ஆடுவதாம்படி. இதுவாகில் முன்பே நாம் செய்வதாக இருந்ததொன்றன்றோ? அச்சரீர ஸம்பந்தமற்றால் ஒரு தேசவிசேஷத்திலே கொண்டு போய், "ஏதத் ஸாமகாயந்நாஸ்தே" என்னும்படி பண்ணுகிறேமென்ன; அதுவோ நான் அபேக்ஷிக்கிறது?

**விளக்கம்** - (எண் திசையும் இத்யாதி) - விஷயத்திற்கு ஏற்றபடியும், தனது ஆசைக்கு ஏற்றபடியும் இருத்தல் வேண்டும் என்பதால், தனது ஆசைக்கு ஏற்றபடியாக "ஆசைப்பட்ட அனைத்தும் வேண்டும்" என்கிறார். அந்த ஆசையானது, அளவுக்கு மீறியதாக உள்ளது; கைங்கர்ய ருசி கொண்டவர்களுடைய சொற்கள் இவ்விதமே இருப்பதாகும். அதாவது பசி எடுத்தவர்கள், "கல அரிசிச்சோறு உண்ணவேண்டும்", என்பது போன்று ஆகும். அயோத்யாகாண்டம் (31-25) - அஹம் ஸர்வம் கரிஷ்யாமி – நான் அனைத்து கைங்கர்யங்களும் செய்வேன் - என்பது போன்றாகும். (உகந்து உகந்து) - ப்ரீதி எப்போதும் மாறாதவிதமாக. (தொண்டரோங்கள்) - இந்தக் கைங்கர்யத்தின் இனிமையை நன்றாக அறிந்த நாங்கள். திருவாய்மொழி (2-7-1) - கேசவன் தமர் - என்ற பாசுரத்திற்குப் பின்னர், தனியானவர்கள் அல்லர் அல்லவோ? (பாடி ஆட) - ப்ரீதியினால் நன்கு தூண்டப்பட்டவர்களாக, பாடுவதும்

ஆடுவதும் என்றபடி. ஆனால் இது, திருவிருத்தம்(1) - பொய்ந்நின்ற ஞானமும் - என்பதை உரைத்தபோதே நிகழ்ந்தது அல்லவோ? ஸர்வேச்வரன் ஆழ்வாரிடம், "இந்தச் சரீரத்தின் ஸம்பந்தம் நீங்கியவுடன் பரமபதத்திற்குக் கொண்டு சென்று தைத்திரீயம் – ஏதத் ஸாமகாயந்நாஸ்தே - ஸாம கானத்தைப் பாடியபடி - என்பதாக நாம் செய்யப்போகிறோம் அல்லவோ?", என்று கேட்டான்; அதற்கு ஆழ்வார், "அதனையோ நான் விரும்புகிறேன்? அல்ல, இங்கேயே வேண்டும்", என்கிறார்.

**வ்யாக்யானம்** - (சூழ்கடல் ஞாலத்துள்ளே) எங்கேனும் விடாய்த்தாரை எங்கேனும் விடாய் தீர்க்கவோ? சூழ்கடல் ஞாலத்துள்ளே நான் காண வரவேணும். (வண் துழாயின்கண்ணி வேந்தே) ஸம்ஸாரத்துக்குள்ளே காட்டுமிடத்தில், அங்குள்ளாருக்குக் காட்சி கொடுக்குமா போலே காட்டவும் வேணும். நித்யஸூரிகளுக்குக் காட்சி கொடுக்கும் ஒப்பனையோடே காட்டவும் வேணும். (வந்திடகில்லாயே) "கூவியுங் கொள்ளாய்" என்றது பற்றாதென்கிறார். வந்திடுகிறிலை. இது நான் பெறாத அம்சம். இதுதான் இருந்தபடியென்? ப்ரக்ருதி ஸம்பந்தமற்றமையும் இல்லை, கைங்கர்யம் பெற்றமையும் இல்லை; இங்ஙனேயிருக்க "இவ்வம்சம் பெற்றேன். இவ்வம்சம் பெற்றிலேன்" என்கிறபடி என்? என்னில், "ஒன்று உத்தேச்யமாய், மற்றையது அதுக்கு உறுப்பாக வருமதிறே". நாமும் முதலிலே "இந்நின்ற நீர்மை யினியாமுறாமை" என்றோமாகில் அவனும் சக்தனாயிருந்தாகில், இது கழிந்ததேயன்றோ என்று அத்தைப் பெற்றாராக நினைத்திருந்தார்; கைங்கர்யம் அவச்யம் பெற்றல்லது நிற்கவொண்ணாமையாலே, அது கைப்புகுராமையைப் பற்றப் பெற்றிலோமென்கிறார்.

**விளக்கம்** - (சூழ்கடல் ஞாலத்துள்ளே) - ஒரு இடத்தில் தாகம் ஏற்பட்டு நிற்பவரை வேறு ஒரு இடத்திற்கு அழைத்துச் சென்று தாகம் தீர்ப்பார்களோ? கடலால் சூழப்பட்ட இந்த உலகத்தில், நான் காணும்படியாக நீ வரவேண்டும். (வண் துழாயின்கண்ணி வேந்தே) - ஸம்ஸார உலகத்தில் வந்து நீ காட்சி அளிக்கும்போது, பரமபதத்தில் உள்ளவர்களுக்கு எவ்விதம் காட்சி அளிப்பாயோ அதனைப் போன்றே வரவேண்டும். நித்யஸூரிகளுக்கு எந்தவித ஒப்பனைகளுடன் காட்சி தருகிறாயோ அதனைப் போன்றே வரவேண்டும். (வந்திடகில்லாயே) -

அதாவது திருவாய்மொழி (4-7-1) – கூவியும் கொள்ளாய் - என்பது போதாது என்கிறார். நீ வரவில்லை. இதுவே நான் அடையாத அம்சமாகும். ஆனால் இவ்விதம் உரைத்தல் எவ்வாறு பொருந்தும்? இந்த ப்ரக்ருதியுடனான ஸம்பந்தம் நீக்கப் பெறவும் இல்லை, கைங்கர்யத்தையும் பெறவில்லை; இப்படி உள்ளபோது, “இந்த அம்சத்தைப் பெற்றேன், இந்த அம்சத்தைப் பெறவில்லை” என்று கூறுவது எப்படி? இதற்கு விடை அளிக்கிறார். அதாவது கைங்கர்யம் என்பது குறிக்கோளாகவும் சரீர ஸம்பந்தம் என்பது அதற்கு உதவுவதாகவும் வருவது அல்லவோ? அதாவது திருவிருத்தம் (1) – இந்நின்ற நீர்மை இனி யாம் உறாமை - என்று உரைக்கும்போது அதனைச் செய்யக்கூடிய சக்தி கொண்டவனாக உள்ளதால், சரீரத்தை நீங்கிக் கொடுத்து விடுவான்; இப்படியாக ப்ரக்ருதியுடனான ஸம்பந்தம் நீங்கப் பெற்றதாக எண்ணினார். ஆனால் கைங்கர்யத்தைப் பெற்றால் அல்லாமல் தரிக்க இயலாது என்பதால், அதனைப் பெறுவதை அடையவில்லை என்கிறார்.

4-7-9 இடகிலேனொன்றட்டகில்லேன் ஐம்புலன் வெல்லகில்லேன்
கடவனாகிக் காலந்தோறும் பூப்பறித்தேத்தகில்லேன்
மடவன்னெஞ்சங்காதல் கூர வல்வினையேன் அயர்ப்பாய்த்
தடவுகின்றேன் எங்குக் காண்பன் சக்கரத்தண்ணலையே?

**பொருள்** - பசி மற்றும் தாகம் கொண்டவர்களுக்கு ஒரு பிடி உணவு மற்றும் ஒரு மிடறு தண்ணீர் கூட அளிக்கவில்லை; இவ்விதம் தான வடிவமான கர்மயோகம் இல்லாததால், ஞானயோகத்திற்கு அங்கமாக உள்ள ஐந்து இந்த்ரியங்களையும் வசப்படுத்தவில்லை; ஞானயோகத்தினால் வரக்கூடிய பக்தியோகம் நிறைந்த சரீரத்தில் இருந்தபடி, ஆராதனை செய்யவேண்டிய காலங்களில், மலர்களைப் பறித்து ஆராதிக்கவும் செய்யவில்லை. இவ்விதம் எந்தவிதமான சக்தியும் அற்றவனாக உள்ளபோதிலும், பற்றிய விஷயத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டபடியும், யாராலும் விடுவிக்க இயலாதாதபடியும் உள்ளதான எனது மனதில் ஆழ்ந்த காதல் மேலோங்கி நிற்கிறது; அதற்கு ஏற்றபடியான அனுபவத்தை அடையப்பெறாத நான், அறிவுக் கேட்டை உடையவனாக நின்று சக்கரத்தைத்

திருக்கரத்தில் ஏந்திய எனது நாதனைக் காணலாம் என்று தேடுகிறேன். அவனை எங்கு காண இயலும்?

**அவதாரிகை** – எம்பெருமானைக் காண்கைக்கு ஈடான கர்மயோகாத்யுபாயங்களொன்றுமின்றிக்கேயிருக்கிற நான் "காணவேணும்" என்று ஆசைப்பட்டால் காண்கைக்கு உபாயமுண்டோ? என்கிறார்.

**விளக்கம்** - "ஸர்வேச்வரனைக் காண்பதற்குத் தகுதி ஏற்படுத்தக்கூடிய கர்மயோகம் போன்ற உபாயங்கள் ஒன்றும் இல்லாத நான், அவனைக் காணவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். இதற்கு ஏதேனும் வழி உள்ளதோ?", என்கிறார்.

**வ்யாக்யானம்** - (இடகிலேன்) ஆர்த்த விஷயத்தைக் கண்டால் "ஐயோ" என்று இரங்கிச் சில இடில், அது ஸர்வேச்வரன் திருவுள்ளத்துக்குச் சாலவுகப்பிறே; அங்ஙனென்றும் செய்யப் பெற்றிலேன். (ஒன்று அட்டகில்லேன்) கையில் த்ரவ்யத்தை அவிழ்த்திடா விட்டால், உடம்பு நோவத் தண்ணீர் சுமந்து வார்க்கலாமிறே; அதுவும் செய்திலேன். (ஐம்புலன் வெல்லகில்லேன்) "பிறர்க்கு ஒன்று வேண்டும்" என்று இராவிட்டால், "எனக்கு" என்னுமதுதான் தவிரப் பெற்றேனோ? ச்ரோத்ராதிகள், விஷயங்களிலே பட்டி போகாதபடி பரிஹரித்திலேன். (கடவனாகி) சாஸ்த்ரங்களிற் சொல்லுகிறபடியே, அடைத்த காலங்களிலே புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டு தேவர் திருவடிகளிலே ஸமாராதநம் பண்ணிற்றிலேன். இவர் ஸமராதநம் பண்ணியறியாரோ? என்னில்; "நூல் பிடித்தாற்போலே" சாஸ்த்ரங்களில் ஸாதநரூபமாகச் சொல்லுகிற ஸமாராதநத்தில் இவர்க்கு அந்வயமில்லை; தேஹயாத்ரைக்கு உடலாகச் செய்யுமது உண்டு. இவையுண்டாயிற்றாகில் பக்தி சரீரத்திலே நிவேசிப்பிக்கலாம், அதுவுமில்லை யென்கிறார். இவற்றினுடைய ஸ்வரூப நிஷேதம் பண்ணுகிறதன்று உபாயத்வத்தை நிஷேதிக்கிறது. (மட வல்நெஞ்சம்) மடப்பத்தால் மென்மையை நினைக்கிறது; அதாவது, "பகவத் விஷயம்" என்றால் கடுக விழுந்து கொண்டு நிற்கை. வன்மையாவது, விழுந்தால் பின்னை அங்குநின்றும் மீட்க அரிதாயிருக்கை. (காதல் கூர) இப்படிப்பட்ட நெஞ்சானது ஸ்நேஹம் மிக. (வல்வினையேன்) ஸ்நேஹாநுகூலமாகக் காணப் பெறாத பாபத்தைப்

பண்ணினேன். காதலுக்கு விஷயம் பெற்றேனல்லேன்; இத்தை அகஞ்சுரிப்படுத்தினே னல்லேன். ஆசாலேசமுடையார்க்கு முகங்கொடாதவனாய் இழந்தேனல்லேன்; என் பாபம் இருந்தபடியேன்?

**விளக்கம்** - (இடகிலேன்) - வருத்தத்துடன் உள்ளவர்களைக் கண்டால், "ஐயோ" என்று அவர்களிடம் இரக்கம் காண்பித்து ஏதேனும் அளித்தால் அது ஸர்வேச்வரனுக்கு மகிழ்வை ஏற்படுத்தும்; ஆனால் அது போன்று எதனையும் நான் செய்யவில்லை. (ஒன்று அட்டகில்லேன்) - கைகளில் உள்ள பொருளை அளிக்காவிட்டாலும், எனது உடம்பு நோகும்படியாகத் தண்ணிர் சுமந்து வந்து அளிக்கலாம் அல்லவோ? அதனையும் நான் செய்யவில்லை. (ஐம்புலன் வெல்லகில்லேன்) - மற்றவர்களுக்கு ஏதேனும் அளிக்க வேண்டும் என்று எண்ணாமல் உள்ளேன்; ஆயினும், எனக்கு என வேண்டுவதை நான் தவிர்க்கிறேனோ என்றால் அதுவும் இல்லை; காது முதலான புலன்களின் விஷயத்தில் கண்டபடி திரியாமல் உள்ள நிலையையும் அடையவில்லை. (கடவனாகி) - சாஸ்த்ரங்களில் கூறுவதற்கு ஏற்ப அந்தந்த காலங்களில் மலர்கள் முதலானவற்றைக் கொண்டு உன்னுடைய திருவடிகளில் சமர்ப்பித்து ஆராதனை செய்கிற நிலையாவது உண்டா என்றால், அதுவும் இல்லை. ஆயினும் இவர் அது போன்று ஆராதனை செய்து அறியாமல் உள்ளாரா என்றால், சாஸ்த்ரங்களில் கூறப்பட்டபடி சரியான முறையில் செய்யவேண்டும் என்பதான ஆராதனத்தில் இவருக்குத் தொடர்பு இல்லை; கைங்கர்யத்திற்காக மட்டுமே செய்தபடி இருப்பார். ஆனால் இவை ஏற்பட்டால், பக்தியுடன் கூடிய சரீரத்துடன் இருக்கலாம் என்றால், அதுவும் இல்லை என்கிறார். அதாவது கர்மயோகம் போன்றவற்றின் செய்கைகளைத் தள்ளவில்லை, அவற்றின் "உபாயமாக உள்ள தன்மை" என்பதையே தள்ளுகிறார். (மட வல்வினையேன்) - மடப்பத்தால் மென்மையை எண்ணுகிறார். அதாவது "பகவத் விஷயம்" என்னும்போது விரைந்து விழுந்து நிற்கும் தன்மை. இதில் வன்மை என்றால், அவ்விதம் விழும்போது எளிதாக மீட்க இயலாமல் உள்ள நிலை. (காதல் கூர) - இப்படிப்பட்ட நெஞ்சானது மிகுந்த காதலுடன் கூடியபடி. (வல் வினையேன்) - அத்தகைய காதலுக்குத் துணை நிற்கும்படியான "அவனைக் காணுதல்" என்பது கைகூடப் பெறாத பாபம் செய்தேன். எனது காதலுக்கான விஷயம் கைகூடப் பெறவில்லை; அதனைக்

குறைத்துக் கொள்ளும் சக்தி உள்ளவன் அல்லன்; துன்பத்தில் வந்து உதவும்படியாக அவன் உள்ளபோதிலும், இவ்விதம் ஆசை கொண்டபடி உள்ள எனக்கு வந்து முகம் காண்பிக்காதபடி இழந்தவன் அல்லேன், எனது பாபங்கள்தான் எத்தகையது?

**வ்யாக்யானம்** - (அயர்ப்பாய்) அறிவுகேட்டையுடையேனாய். (தடவுகின்றேன்) முன்னே வந்து நின்றாலும் காணமாட்டாதபடி தடவாநின்றேன். "நத்வா பச்யாமி கௌஸல்யே" என்கிறபடியே. (எங்குக் காண்பன்) ஒரு கைம்முதலின்றிக்கேயிருக்கக் கூப்பிடுகிற நான் எங்கே காணக் கூப்பிடுகிறேன்? (சக்கரத்தண்ணலையே) கையிலே திருவாழியையுடைய ஸர்வேச்வரனை எங்கே காணக்கடவேன்? யசோதைப்பிராட்டி கையும்வெண்ணெயுமாகப் பிடித்துக் கொண்டாற்போலே, கையும் "நெய்யாராழி" யுமாகப் பிடித்துக் கொள்ளவாயிற்று இவர் ஆசைப்படுகிறது.

**விளக்கம்** - (அயர்ப்பாய்) - அறிவுகேடு உள்ளவனாக. (தடவுகின்றேன்) - எனக்கு முன்பாக அவன் வந்து நின்றாலும் காண இயலாதபடி உள்ளேன். அயோத்யாகாண்டம் (42-34) – நத்வா பச்யாமி கௌஸல்யே - தசரதன் கௌஸலையிடம் "உன்னை என்னால் காண இயலவில்லை" – என்று கூறுவதற்கு ஏற்ப ஆகும். (எங்குக் காண்பேன்) – எந்தவிதமான கைம்முதலும் இல்லாதபடி உள்ள நான், உன்னை எங்கு காண்பதாக எண்ணி அழைக்கிறேன்? (சக்கரத்தண்ணலையே) - திருக்கரத்தில் சுதர்சன சக்கரத்தை ஏந்தியபடி உள்ள ஸர்வேச்வரனை நான் எங்கு காண்பேன்? யசோதை க்ருஷ்ணனைக் கையும் வெண்ணெயுமாகப் பிடித்தது போன்று இவர் அவனை, பெரியதிருமொழி (7-7-3) – நெய்யார் ஆழி – என்பதற்கு ஏற்ப உள்ள கையும் சக்கரமுகமாகப் பிடிக்க விரும்புகிறார்.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி ஆளவந்தார் அருளிச் செய்த

# ஸ்தோத்ர ரத்னம்

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை

அருளிச் செய்த வ்யாக்யானம்

(பகுதி – 20)

**வ்யாக்யானம்** - (அபவர்க்க) சப்தாதிகளுடைய அல்பாஸ்திரத்வாதி தோஷ தர்சனத்தாலே பீதரான சேதனருக்கு துக்க நிவ்ருத்தி ரூபமான ஆத்மப்ராப்தியும், ஸுகைகதானமான பகவத் ப்ராப்தியும். தத்ராபி ஸ: - "யோகிநாம் அம்ருதம் ஸ்தாநம் ஸ்வாத்ம ஸந்தோஷகாரிணாம்", "ததஸ்ய த்ரிவித ஸ்யாபி துக்க ஜாதஸ்ய" இத்யாரப்ய "நிரஸ்தாதிசயாஹ்லாத ஸுகபாவைக லக்ஷணா | பேஷஜம் பகவத் ப்ராப்தி: ஏகாந்தாத்யந்திகீ மதா" இத்யாதி. (ததுபாய கதீ:) போக மோக்ஷங்களுடைய ஸாதன பேதங்களை. நித்ய நைமித்திக காம்யகர்மாநுஷ்ட்டாநம் போகஸ்ய; ஸாங்காநுஷ்ட்டித கர்மஸாத்ய ஜ்ஞாந யோகாதி ஆத்மப்ராப்தே:; ஜ்ஞாந கர்மாநுக்ருஹீத பக்தி: ப்ரபத்திச்ச பகவத் ப்ராப்தே:". (உதார:) ஸம்ஸாரிகள் பக்கல் அர்த்தித்வமாதல், ப்ரயோஜனமாதல் நினையாதே, இவர்கள் அனர்த்த பரிஹாரமே ப்ரயோஜனமாக, உபகரித்தல்லது நிற்கமாட்டாத மேகம் போலே உபகரித்தவர்.

**விளக்கம்** - (அபவர்க்க) - சப்தம் முதலான புலன் விஷயங்கள் அனைத்தும் நிலையற்றவை என்று அவற்றில் உள்ள தோஷங்களைக் கண்டு கொள்வதன் மூலம் சேதனர்கள் அச்சம் கொள்கிறார்கள். அவர்களுக்கு ஏற்பட்ட அந்தத் துக்கத்தை நீக்கவல்லதான ஆத்மாவைக் குறித்து அறிதல் மற்றும் சுகத்திற்கு ஒரே இருப்பிடமாக உள்ள பகவானை அடைதல். இதனை ஸ்ரீவிபு (1-6-38) - யோகிநாம் அம்ருதம் ஸ்தாநம் ஸ்வாத்ம ஸந்தோஷகாரிணாம் - ஆத்மாவை மட்டுமே

அனுபவித்தபடி உள்ள யோகிகளுக்கு ஏற்றதான அழிவற்ற இடம் – என்றும், ஸ்ரீவிபு (6-5-58) - ததஸ்ய த்ரிவித ஸ்யாபி துக்க ஜாதஸ்ய - கர்ப்பம், பிறப்பு இறப்பு என்பதான மூன்றுவித துக்க நிலைகளில் – என்று தொடங்கி, ஸ்ரீவிபு (6-5-59) - நிரஸ்தாதிசயாஹ்லாத ஸுகபாவைக லக்ஷணா | பேஷஜம் பகவத் ப்ராப்தி: ஏகாந்தாத்யந்திகீ மதா - எல்லையற்ற ஆனந்த ரூபமாக உள்ளதும், சுகமே வடிவமாக உள்ளதும், துன்பம் அற்றதும், முடிவு அற்றதும் ஆகிய பகவத் ப்ராப்தி என்பதே மருந்தாக எண்ணப்படுகிறது - என்று முடிவதும் உள்ள வாக்கியங்கள் காண்க. (தத் உபாய கதீ) - இந்த உலகில் உள்ள இன்பங்கள் மற்றும் மோக்ஷம் ஆகியவற்றை அடைவதற்கு உள்ள உபாயங்களில் காணப்படும் வேறுபாடுகளை. அதாவது நித்ய, நைமித்திக காம்ய கர்மங்களானவை, உலகியல் இன்பங்களை அளிக்கவல்ல உபாயங்கள் ஆகும்; அங்கங்களுடன் கூடிய சரணாகதி செய்யும் கர்மம் மூலமாக ஞானயோகத்தைப் பெறுதல் என்பது ஆத்மாவை அடையும் வழியாகும்; ஞானம் மற்றும் கர்மம் மூலமாகப் பக்தி மற்றும் ப்ரபத்தி மூலம் பகவான் அடைதல் என்பது நிகழும். (உதார:) – ஸம்ஸாரிகளிடமிருந்து தன்னைக் கொண்டாட வேண்டும் என்பதையோ அல்லது எந்தவிதமான பயனையும் எதிர்பாராமலோ இருந்தபடி இவர்களிடம் உள்ள தோஷத்தை விலக்குதல் என்பதை மட்டுமே தனக்குப் பயனாகக் கொண்டு உபகாரம் செய்தால் அல்லாமல் பொறுக்க மாட்டாத மேகம் போன்று உபகாரம் செய்தவர்.

ஸ்வாமி ஆளவந்தார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்